கணபதிதுணை.

# விஷப்பிரதி ஸம்ஹிதைட்டு.

---

சுந்தரானந்தர் செய்த

# ஆயுள்வேதப் பொருட்சுலைக்கூடனும்

திருமூலர்

# நாடியந்தாதி

இவை

சித்தர்

ஆயுள்வேதசபையாரி லோகுருவாகிய

தில்லையம்பூர்

சந்திரசேகரகவிராசபண்டிதரவர்களால்

ஆராய்ச்சிசெய்யப்பட்ட

பதிப்பிற்கிணங்க

திருமயிலை வி. சுந்தரமுதலியாரவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

---

1909.

RangaRakes tamilnavarasam.com

# சாத்துகவிகள்.

இஃது இராஜதானி

வித்தியாசாலையில் தமிழ்த்தலைமைப் புலமைநடாத்திய

இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை

விசாகப்பெருமாளையரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

ஒருந்தோங்கிய நீருலகத்தினில்
காரணனியற்றிய வோரிருதிணைகளுள்
வீடுபேற்றிற் கிடனாகிய
மாக்கடமக்கே போக்கருமாயுள்
வேதமோதிய நீதமுமுதல்வன்
அருள்வழிப்பட்ட தெருளுறுமறிஞர்
பற்பலநூல்களைப் பாங்குடனியற்றி
அப்பெருநூல்களு ளெப்பிணிகளுக்கும்
உததியிற்றோன்றிய வுயிர்தருமருந்தினை
இதமுறுமருந்தை யியம்பினர்பின்னும்
நிலத்திணையியங்கு திணையஃதென்னும்
உலத்திவிடபிரான் வெண்ணிலத்தினாயி
னல்வரும்பிடர்க்குக் காலனுமாற்றை
அறையும்விடப்பிர திவ்விடநூலையும்
விதியுணர்விக்கும் பொதுலக்கணத்தையும்
பெருநூலுணர்ந்த திருமூலர்நாடியும்
எந்நூல்களினவ மேற்றமென்றோர்ந்தே
பன்னூல்களுமுணர் பண்புறுகவினுன்
சிற்றூராயுன் வேதசங்கத்தின்
உற்றபுலவ னுசேவோங்கிய
சந்திரசேகரகவி ராஜபண்டிதனெனும்
சுந்தரக் கவிஞன்றெகுத்த
விந்தையாபச்சில் விளக்கினன்மாதோ.

RangaRakes tamilnavarasam.com

ஸ்ரீ

சித்தூர் ஜில்லா

துரைத்தனபாடசாலைகளின் விசாரணைகர்த்தராகிய

நெல்வேலி

# முருகேசமுதலியாரவர்களியற்றிய

## கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

புவிராயதிருத்தில்லையம்பூர்ச்சந்திர
சேகரனென்புகழ்பூத்தவியப்போர்வாய்ந்த
கவிராயபண்டிதன்னல்லாயுள்வேதர்
கூறுவிடப்பிரதிவிடம்பொதுனாதி
கவிராதலவினைசேர்த்துரையுடக்கவினர்த்தே
யசிவிடுவித்தனலைக்கில்சான்றோ
இவிராதகம்பனொட்டக்கூத்தனாதி
யெவ முனுநின்மின்மினிபோலிழிவர்தாமே. (க)

சலதிக்வளர்மாளிடப்பயிர்தழைத்தொ பெலா
யபர்நூனயபுளையடைய
அன்னைசேர்சிவகருணையப்பெருமழை
பொழிந்திடையிலாப்பத்தியாய்
கூலநில்துயர்செய்பிணிக்களைநீக்குமண்மகந்தி
ரௌடகக்களமர்தம்மால்
அளியாதிசைந்திபெற்றிமெறிஞர்கருணைகூர்ந்த
தப்புருசேர்பொதுலட்சணம்
இலகுவிடப்பிரதிவிடமெனுநூன்மாவிய
மியற்றினர்பரவினைத்தேயோர்
தேகங்காந்தாயுள் வேதச்சபைத்தலைவ
ர்ச்சித்தபடியச்சினிற்
பலர்புகழ்த்தில்லையம்பூர்ச்சந்திரசேகர
கவிராஜமாபண்டிதன்
பாநுகிரணம்போலயோவருமணர்த்திடப்
பதித்ததுவெளியாக்கினனரோ. (உ)

# சாத்துகவிகள்.

இந்து - பொன்விளைந்தகளத்தூர்
சங்கீதசாகித்திய வித்வசிரோமணி
ஸ்ரீ ராமசாமி உபாத்தியாயர் குமாரர்
கோவிந்தராயகரால்
இயற்றப்பட்ட

## நேரிசையாசிரியப்பா.

உலகெலாம்பரவு மொருதனிமுதல்வன்
உபயவுறுவயர்ந்திர ளுயர்வுறத்தருநம்
பலப்படைகையில்லா கலப்பெருநிலத்தோரான்
பாபத்தால்வருந் தாபத்ரயத்தின்
கோபத்தைதீர்க்கு மாபத்பாந்தவன்
அதனிதனுரான வகண்டாகாரன்
ஆடிநடுமுடிவிலன் படிபுனைலரிகால்
மானும்வற்றிற் முறுமிவைக்குந்
தனு அதபடினை விளுவியுமறிதற்
கவாங்மநோகோசர னலாவாத்தாரு
நித்தியனிர்மலன் தத்துவரூல
சதாநாதனை ஸாதனையருளால்
மூதுணர்ந்தோர்க மோதுபன்னூல்கள்
மன்பனைநதழைக்க வுன்பனைநத்தொண்டே
அறைந்தனரவற்றுள் சிறந்தமொழியுஞ்
வேதமென்று மேதாவிசர்க்கடலின்
இலாபங்கொண்டு சலைப்புகுளிர்க்குஞ்
சீராய்த்தொடுத்த சீராசுபரன்
மனிபொபணிமைக்கு மணிதிகழுட்டுவவ
டாவிலைமைத்து புதுமைபொருந்தா
இயற்கையாலுஞ் செயற்கையாலும்
உண்டமாந்தர் கொண்டவிடத்தால்
மன்னுயிர்க்குற்ற வின்னைத்தீர்க்க
வெல்விஷப்பிரதி விஷத்திரட்டென்னும்
நல்விஷபத்வதக் சொல்லுநூலையும்
பொதுவிஷமா மூலநூறன்றாயுந்
திருமூலராகிய திருமூலர்நாடியும்
மொழியுவந்தாதியின் வழுவறக்கோர்த்து
செழுமியபொருளை வழிபடுத்துணரக்
கற்றதனுற்றன் பெற்றபயனை

எல்லோரும்பெற வல்லோர்மதிக்கு
உச்சிதமான வச்சிரியற்றினன்
சிற்றூராராயுள் வேதசபைக்கொரு
உற்றதுணைவ னாகவோங்கிய
செய்யவனாலவுஞ் செய்வராலுகளும்
அம்பொழிற்றில்லை யம்பூர்வாசன்
சிவனடிபணியுஞ் சிவகுருநாதன்
செய்தவப்பயனால் வையகத்துதித்த
சந்திரசேகர சுந்தரமிகுகவி
ராஜபண்டிதனல் ராஜதானியின்
சிற்றூர்ஜில்லா விற்பொருவில்லாப்
பாடசாலையி லீடறுமியற்றமிழ்
ஆசிரியச்சொலு மாசிரியன்
நேயர்சகாயன் தூயநாவலனே.

---

இஃது - துரைத்தனத்தாரேற்படுத்திய
திருப்புத்தூர் ஆற்காடுத்தாலூக்காப் பாடசாலைகளில்
தமிழ்ப்பண்டிதராயிருந்த
காஞ்சீபுரம் கோவிந்த முதலியாரியற்றிய
நிலைமண்டில ஆசிரியப்பா.

திருமணிமாந்தரின் பெருவலியதனாப்
போக்கமருந்துகூர் மீக்கொளுமாயுள்
வேதமோதிய நிகரறுமுன்னோர்
ஆய்ந்தெடுத்துரைத்த வேய்ந்தநூலதனுள்
சராசரமென்னச் சாற்றிருவிடத்தில்
அசரவிடத்தி லயர்வோர்தமக்கு
மாற்றுமருந்தின் கூற்றையுரைக்கும்
விடப்பிரதிவிட மென்னுநூலையும்
அடற்பெருபொதுவிதி யறைபுநூலையும்
அச்சியற்றென வாயுள்வேதத்தின்
மெச்சிடுசபையார் வேண்டுகோளின்படி
எல்லையெலாம்புகழ் தில்லையம்பூர்வாழ்
சந்திரசேகர கவிராஜபண்டிதன்
பந்தமாமச்சிற் பதித்தனன்மாதோ.

சாத்துகவிகள் முற்றுப்பெற்றன.

---

RangaRakes tamilnavarasam.com

# அரும்பதப்பொருளகராதி.

அங்கனை—பெண்.
அடலை—சாம்பல்.
அடுகை—காய்ச்சுதல்.
அட்டு—காய்ச்சி, சமைத்து.
அமலை—சோறு.
அம்புயம்—தாமரை.
அரம்பை—வாழை.
அருணம்—எலுமிச்சை.
அருக்கல்—சுண்டக்காய்ச்சல்.
அவுரி—நீலி.
ஆக்கிநேயம்—விபூதி.
ஆடகம்—துவரை.
ஆண்டு—வருஷம்.
ஆமலகம்—நெல்லி.
ஆயுள்வேதம்—வைத்தியநூல்.
ஆரல்—கார்த்திகை.
ஆருவம்—தண்ணீர்.
ஆன்பால்—பசுவின்பால்.
இதல்—கவுதாரி.
இயற்கை—சுபாவம்.
இருந்தை—மரக்கரி.
இருவங்கம்—வெள்ளீயம், காரீயம்.
இன்னா—துன்பம்.
ஈட்டல்—சம்பாதித்தல்.
ஈருள்ளி—வெங்காயம்.
உஞற்றல்—செய்தல்.
உயர்படம்—பெரும்படம்.
உவரிநீர்—உப்புநீர்.
உவர்—உப்பு.
உள்ளம்—உள்ளான்.
ஊஞ்சற்பட்டை—சிக்கிரம்பட்டை.
ஊறன்—ஓர்கொடி.
எகினத்திலை—புளியிலை.
எரண்டம்—ஆமணக்கு.
ஏனம்—பன்றி.
ஐயவி—கடுகு.
ஓகை—சந்தோஷம்.
ஓடதி—மூலிகை.

கடு—கடுக்காய்.
கதலி—வாழை.
கந்தம்—கிழங்கு, கருணைக்கிழங்கு.
கபிஞ்சலம்—காடை.
கரும்பூலிலை—கறுப்புப்பூலாவிலை.
கலினி—திப்பிலி.
கரி—மிளகு.
கன்னல்—நாழிகை, கரும்பு.
கன்னற்கட்டி—கரும்பு, வெல்லம்.
கன்னி—வாழை.
காரவல்லி—பாகற்செடி.
காரகி—வெள்ளாடு.
கால்—காற்று.
குக்குடம்—கோழி.
குடிஞைப்புள்கு—ஆந்தைப்புள்கு.
குடிநீர்—கஷாயம்.
குல்லை—துளசி.
குய்—தாளிப்பு.
கூஷ்மாண்டம்—பூசணி, பரங்கி.
கொடிவேலி—சித்திரமூலம்.
கோமயம்—சாணம்.
கோமளம்—பசு.
கோரக்கர்மூலி—கஞ்சா.
கோற்றேன்—கொம்புத்தேன்.
சம்பீரம்—எலுமிச்சை.
சாகினி—சிறுகீரை.
சாலி—நெல்.
சிக்குரு—முருங்கை.
சித்திரபானு—சூரியன்.
சிற்றம்மான்பச்சரி—சிறு அம்மான்பச்சரிசி.
சினம்—படிக்காரம்.
சுண்டி—சுக்கு.
சுரபி } பசு.
சுரை }
சுருதிநாயகன்—கடவுள்.
செக்காஞ்சி—சிவப்புமணித்தக்காளி.
செனிகை—கடலை.

RangaRakes tamilnavarasam.com

தசை—மாமிசம்.
தருக்குபுடம்—துறைக்கபுடம்.
திலம்—எள்.
துய்க்கல்—சாப்பிடல்.
துருசு—மயிற்றுத்தம்.
தேளிமீன்—தெளிமீன்.
நாய்வேளை—நல்வேளை.
நெட்டுரு—நீட்டு.
நெசவு—நூற்பல்.
நயனம்—கண்.
நஞ்செப்பு—பசிநோய்.
நாகேசுரம்—இஞ்சவற்று.
நிசி—இருசர்.
பஞ்சதாரை—சருக்கரை.
படிறு—பொய்.
பதம்—சோறு, சமுகை.
புளிசடலை—புளியாணை.
போராத்தை—தும்பராஷ்டம்.
பொரிகாரம்—வெங்காரம்.
மருதோன்றி—ஐவணாசெடி.
மரை—தாமரை.
மாஷம்—உழுந்து.
முந்நாள்—மூன்றுநாள்.
மூபங்கல்—கலத்சல்.
மூலம்—கிழங்கு, வேர்.
மேதி—எருமை.
வருக்கை—பலா.
வாரணத்தண்டம்—கோழிமுட்டை.
விடத்தேரை—விடத்தாரி.
விடுதல்—நீங்கல்.
வெள்ளுள்ளி—வெள்ளைப்பூண்டு.
வெள்ளை—வெள்ளாடு.
வேய்—மூங்கில்.
வை—வைக்கோல்.

அருட்பதப்பொருளகராதி முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

சிவமயம்.

# விஷப்பிரதி விஷத்திரட்டு.

## காப்பு.

### கணபதி வணக்கம்.

வெண்பா.

சீரார் கரிமுகத்துச் செம்ம லடிபணிவாம்
பாரார் விஷத்தின் பகைவிஷத்தை—நேராப்
பகர வெமக்குநற் பண்பளித்து மேலாந்
தகைதருக வேண்டுமெனத் தான். (௧)

### பரசிவ வணக்கம்.

சித்தர்பன் னூலிற் றெரித்துரைத்த தியாஞ்சம்
அத்தனைக்கு மாற்றை யறிந்தெடுத்து—இத்தரையில்
அந்தாதி யாக வறையவே யைம்முகன்றன்
எந்தாத் துணையா நமக்கு. (௨)

### நூற்பெருமை.

உலகத் ததிந்தநாள் கோடதிக ளுள்ளும்
பலபொருள்க ளுள்ளும் பகையா—நிலவும்
இயற்கை செயற்கையா மின்னலின் மாந்தர்
உயற்குவகை நூலிதென்றே யோது. (௩)

### எட்டிக்கோட்டைத்தயாரிப்பு.

எட்டிதின் றோர்கட் கெழிறைவற் பட்டைதனைத்
தட்டியரைத் தேகொடுக்கத் தான்றீரும்—வட்ட
மரைக்கிழங்கா மறுணியின் வாலிலையின் சாறும்
ஒருக்கடுக்காய் நற்குடிநீ ரோது. (௪)

ஓதவரி வேர்த்தோ லுடனரைத்துக் கொள்ளப்போம்
தீதிலா வெற்றிலையுந் தீர்த்துவிடும்—யாதேகேள்
வெந்தயமு நன்மிளகும் வெந்நீரி லேயரைத்து
அந்தவென்னை யிட்டருந்தப் போம். (௫)

RangaRakes tamilnavarasam.com

## ஊமத்தைக்குமாற்று.

போமேயூ மத்தை புசித்தால் மரைக்கிழங்கைத்
தேமேவு காடிவிட்டுத் தின்னப்போம்—ஆமவுரி
வேராகும் வாந்தி விழவருந்தி வெள்ளழிஞ்சில்
வேரருணைச் சாந்திலரைத் துண். (௬)

## அலரிவேர் நல்லெண்ணெய்க்குமாற்று.

உண்ணலரி யெண்ணெண்ணெ யூற்றியரைத் துண்டோர்க்கு
வண்ணகடு வின்குடிநீர் வாட்டுமே—நண்ணும்
முடிமேன் முடிக்கிழங்கை மூட்டுவெந் நீரில்
அடியார் அருகமுண்ணச் சொல். (௭)

## சுண்ணாம்புக்கும்வாளத்துக்குமாற்று.

சொல்லுவாய் சுண்ணத்தைக் கொண்டோர்க்குத் தூயதாம்
நல்லமஞ்ச ளாமேதி நன்மைமாரோ—வெல்லரிய
வாளந் தனக்காம் வசம்பி னடலையுமாம்
நீள்புளிக்கோ தின்னீறு நேர். (௮)

## மருதோன்றிக்கும், நுங்கிற்குமாற்று.

நேரா மருதோன்றி நீள்திலத்தி னெண்ணையுடன்
சேரவரைத் துண்டக்கா னீக்கரு—வார்குழலாய்
தான்றிக்காய் நற்குடிநீர் தானுநுங்கினுக்குப்
போன்றுபெருங் காயம் புகல். (௯)

## எருக்கம்பாலுக்கு மாற்று.

புகலெருக்கம் பாலுக்குப் பொற்புடைய வெள்ளும்
தகவுடைய சர்க்கரையுந் தானும்—மிகுபருத்தி
வானிலையிற் காடிதனை வார்த்தரைத்துக் கொள்ளப்போம்
சீர்பிசியே ரண்டநெய்யாஞ் செப்பு. (௰)

## அபினிக்குமாற்று.

செப்புவாய் நல்லபினி தின்றோர்க்கு நெய்யாகும்
ஒப்பரிய விருள்ளி யோட்டுமே—இப்புவியில்
சம்பிர நற்றனிபின் சாறுகுஞ் சுக்குமாம்
நம்பவுரைத் தோமிதனை நாம். (௧௧)

RangaRakes tamilnavarasam.com

## விஷப்பிரதி விஷத்திரயம்.

### நாபிக்குமாற்று.

நாபிதின் றோருக்கு நற்சா ணிவேரை
மேனியே யான்பாலினைப் விட்டரைத்துண்—ஆவினெய்யிற்
பன்றிவிர்ஷ்டைகொண்டரைத்துண் பன்னுகபிக்காய்க்குடிநீர்
என்றுமதை யோட்டு மியம்பு. (கஉ)

இயம்புபுத்ர சோகிவித்தை யேற்ற சுரைநெய்யில்
நயம்பெறநீ யுண்டிடவே யோட்டு—வயம்பெருது [ப்
வெங்காரந்தன்னை முன்னெய் விட்டரைத்துண் ணன்பினகை
பண்மொழியா யுண்டிடநீ யார். (கங)

பார்முள்ளிக் காயளவு பைம்பீன் றசையரைத்துச்
சேர்சுரபி வெண்ணெயிட்டுத் தின்னப்போம்—வார்குழலாய்
ஆனமயிற் றுத்தத்தை யங்கனைப்பால் விட்டரைத்துத்
தானருந்தில் தீருமென்றே சாற்று. (கச)

### நெல்வேர்சர்க்கரைக்கு மாற்று.

சாற்றுவாய் நெல்வேருஞ் சர்க்கரையுங் கொண்டோர்க்கு
மாற்றெருக்க நல்லிலைச்சா றுண்ணானே—ஆற்றலவ்
வேருடனெள் ளெண்ணெய்க்கு வீறு சுரைபிலைபாம்
பேரெலுமிச் சம்வேரைப் பேசு.

பேசிடுவாய் நெல்வேர்க்குப் பேய்ப்பீர்க்கின் வேரை
ஆசிலா நீர்விட்டே யட்டுண்பாய்—வீசுகின்ற
நன்னுவிலா மிச்சம்வேர் நற்குடிநீர் தன்னையே
உண்ணப்போ மென்றே யுரை. (கசு)

### தில்லைப்பாலுக்கு மாற்று.

உரைத்திடுவாய் தில்லைப்பா லுறுசெயின் மாதே
நரைக்கோவைச் சாற்றையுண்ண நன்றும்—விரைத்தவிளக்
கெண்ணெயுமாங் காரெள்ளைப் பின்கோ மயமாகும்
உண்ணெருமை மோரு முகந்து. (கஎ)

### வேர்க்கடலைக்கும், தேங்காய்க்கு மாற்று.

உகந்தால் வேர்க்கடலை யுண்டோர்க்குச் சொல்வோம்
செகம்புகழுஞ் சீர்கன்னற் கட்டி—சகம்பெறவே
தின்னப்போந் தேங்காயைத் தின்றோர்க்கு பீதேயாம்
பண்ணுவாய் பச்சரிசி யாம். (கஅ)

RangaRakes tamilnavarasam.com

### நெய்தேனுக்கு மாற்று.

ஆவின்நெய் நற்றே னளவு சரியாக
மேவியதை யுண்டால் விளம்பக்கேள் — தாவில்
இருந்தையை நீர்விட் டிளக வரைத்தே
அருந்தப்போ மென்றே யறை. (௧௯)

### கோழிமுட்டைக்கும், வாழைப்பழத்துக்கு மாற்று.

அரைந்திடுவாய் வாரணத்தி னண்டத்தின் வேகம்
சிறந்திடுமுன் னங்கிழ லத்தாற் — பறந்துவிடும்
வாழைக் கனியருந்தின் மாதே புளியிலையின்
கோழைக் குடிநீரைக் கூறு. (௨௦)

### நல்லெண்ணெய்சோற்றுக்கும், வெற்றிலைச்சாறு நல்லெண்ணெய்க்கு மாற்று.

கூறுவா யெள்ளெண்ணெய் கூட்டியதைச் சேர்சோற்றை
விறுடனுண் டாற்காடி வேகமதை — வேறுசெயும்
வெற்றிலைச்சாறென்னெண்ணெய் மேவியுண்டோர் தங்களுக்கு
முற்றினதேங் காய்ப்பால் மொழி. (௨௧)

### கடலை, துவரை, மொச்சைக்கும்; நெய்க்கு மாற்று.

மொழிகடலை யாடகநன் மொச்சையுடன் றிற்கும்
வழுவறுசெம் மண்ணைநீர் வார்த்துப் — பழுதறவே
நன்றாக் கரைத்தருந்த வாடாது நெய்தனக்கு
நன்றாவான் பாலிலையே நாட்டு. (௨௨)

### உளுந்துக்கு மாற்று.

நாட்டுவாய் மாடத்தை நன்றாகத் தின்றோர்க்குக்
கூட்டுவாய் கொள்ளுங்காய் வேளையின்வேர் — வாட்டமற
நன்மிளகு சீரகந்தே னுங்குங் கலந்துநன்றாக்
கொன்விழியாய் காய்ச்சிக் கொடு. (௨௩)

### பலாப்பழத்துக்கும், பாலாடைக்குமாற்று.

கொடுப்பாய் வருக்கைக் கனியருந்திற் கோற்றேன்
குடிப்பார் நறுநெய்யுந் தானும் — அடுக்கான
பாலாடை தின்னின் பகர்புளித்த மோரதனை
வேலாம் விழியாய் விடு. (௨௪)

RangaRakes tamilnavarasam.com

## கோதுமைக்கும், நல்லெண்ணெய்க்கு மாற்று.

விட்டிடுவாய் கோதுமைக்கு வெய்ய வினைகள்யாம்
பட்டிலான் பானைப்பு மாகுமே—திட்டமுடன்
எள்ளெண்ணெ யுண்டா லெழிதூசற் பட்டைதனைக்
கொள்ளப்போ மென்றே குறி. (உ௫)

## கத்தாவுக்கு மாற்று.

குறித்திடுவாய் கோரக்கர் மூலிக்குச் சக்கின்
வெறித்திடுந் துண்டால் விலகும்—நறைக்குழலாய்
சம்பிரச் சாறுந் தனிக்கதலிப் பட்டையினீர்
உம்பரறு தொக்குமதை யுண். (உ௬)

## புகையிலைக்கு மாற்று.

உண்பாய் புகையிலையை யுட்கொள்ளி னல்லைநத்தி
பண்பான கீரை தின்னப் பாறுமே—நண்பாக்
குறிஞ்சாவின் கீரையுள்ளி கூறுநற் சீரம்
உரப்பெறவட் டுக்குடிநீ ரோட்டு. (உ௭)

## ஊறுங்கிழங்குக்கும், நாகக்கொட்டைக்கு மாற்று.

ஓட்டிற வுங்கிழங்கை யுண்டோர்க்கு வெள்ளிலையை
நாட்டிசக் கம்பழத்தின் சாற்றைநீ—மாட்டிடுவாய்
நாகக்கொட் டைக்குநீ நன்னீரிற் கொள்ளரைந்துத்
தோகையே கொள்ளத் துணி. (உ௮)

## கர்ப்பூரத்துக்கு மாற்று.

துணிந்திடுகர்ப் பூரத்தைத் தோர்விற்கொண் டோர்க்குப்
பணித்திடுவாய் சம்பிரச் சாற்றில்—கணித்தபலம்
நற்சாசிக் கட்டிதனை நன்று பரைத்தெடுத்து
அற்றவர்ன் மோரிலுண்பா யன்று. (உ௯)

## சிவனார்க்கிழங்குக்கு மாற்று.

அன்று சிவனார்க் கிழங்கை யருந்தினிடின்
நன்றாய்ச் சாகு மின்குடிநீர் நாட்டுவாய்—இன்னுமதை
வெள்ளரியின் வித்ததனை வெந்நீரி லேயரைத்துண்
டொள்ளியநோ வற்றொழுந்து போம். (௩௦)

## இலவிங்கப் பிசினுக்கும், சதுரக்கள்ளிப்பாலுக்கு மாற்று.

உண்டக்கா னல்லிலவி ஞெண்பிசினை வெல்லதற்குத்
தண்டாச்சிவன்வேம்பைத்தானரைத்துண்—ஒண்டொடியே
தொள்ளப்போங் கள்ளியின்பால் கொண்டாலா வாரையிலை
மெள்ளவரைத் துண்ணு விரும்பு. (௩௧)

## குன்றிமணிப் பருப்புக்கு மாற்று.

விருப்பான குன்றிவித்தை மேவியரைத் துண்டால்
பொரிக்காரந் தன்னைப் பொரித்து—விரைக்குழலாய்
வெந்நீரி லிட்டுண் விடத்தேரை வேரதனை
வெந்நீரி லிட்டுண் விரைந்து. (௩௨)

## மகிழம்பிஞ்சுக்கும், சோற்றிற்கு மாற்று.

விரைமகிழம் பிஞ்சுவித்தை வெய்யசுண்ணத் திட்டி.
வரையினுந் தாமணிவேர் மாதே—அரைகொடுத்துக்
சொள்ளப்போ மேயமலை கொண்டோர்க்குச் சிரகமாம்
கொள்ளுக்காய் வேளைவேர் கொள். (௩௩)

## சோற்றிற்கும், கோடிக்கள்ளிப்பாலுக்கு மாற்று.

கொள்வாய் புளிந்தயிருங் கூறுமலைக் காங்கேரும்
நள்ளாக் கொடிக்கள்ளி நாட்டுபால்—உள்ளாயின்
கோவைச்சா றுகுமே கோமளத்தின் கோமயமாம்
பாவைகு நாயமண்ணுறு மாம். (௩௪)

## கழுதைவண்டுக்கு மாற்று.

ஆமே கழுதைவண்டிற் கம்புயத்தின் மூலத்தைத்
தேமேவு மாவின்பால் சேர்த்தரைத்துண்—போமே
அவரை யிலையை யரைத்துண்பாய் பாலில்
தவலரிய சிரகமுந் தான். (௩௫)

தான்கொடுப்பாய் வெண்சங்கின் தன்னாவேர் தன்னைநீ
ஆன்பாலி லாட்டி யருந்திடவே—வானசத்தி
நற்சாறு மீவாய்நீ நல்லகரு வேலந்தோல்
விற்சாறு மீய விளம்பு. (௩௬)

RangaRakes tamilnavarasam.com

விளம்பா யறைக்கீரை வேரையான் பாலில்
குழம்பா வரைத்துக் குடிக்க—வளப்பருத்தி
நீளிலைச்சா றுண்ணலா நேரவுரி வேராமே
ஆள்நா யுருவியுண்பா யாங்கு. (௧௭)

### கோடல்கிழங்குக்கும், மிளகாய்க்குமாற்று.

ஆங்கோட லின்கிழங்கை யாற்றவுணி னீலியின்வேர்
பாங்காவெந் நீரிற் பருகுவாய்—தேங்காமல்
கார மிகுந்த கடிமிளகாய் தின்றோர்க்குச்
சீர்கொத்து மல்லிநெய்யுஞ் சேர். (௧௮)

### பாதரசத்திற்கு மாற்று.

சேரிரதங் கொண்டோர்க்குச் செப்புவாய் வெள்ளரங்கின்
சாறுகும் காரவல்லிச் சாறுகும்—சீர்நீலி
நன்மைவேர் வெந்நீரில் நல்லசுண்டைக் காயளவு
மூன்னா ளருந்தல் முறை. (௧௯)

### சவ்வீரத்திற்கு மாற்று.

முறையாகச் சவ்வீர மொய்குழலாய் கொண்டால்
சிறுகெருஞ்சிற் சாறுண்ணத் தீரும்—அறையக்கேள்
நீலிவே ராகுமே நெய்ச்சிட்டிச் சாறுமே
பாலிதென்னங் கள்ளும் பகர். (௨௦)

### பூரத்துக்கு மாற்று.

பகருவாய் பூரத்தைப் பாங்குடன்றின் றோர்க்கு
இகலரிய குல்லையின்சா றீயத்—தகவுடைய
எரண்ட நெய்யா மெழிலவுரி வேராகும்
சீர்கொண்ட பாகலிலை தேர். (௨௧)

### தாளகத்துக்கு மாற்று.

தேருவாய் தாளகத்தைத் தின்றோர்க்கு நீலியதன்
வேருடனே பாவிரம்பூ வெட்டிவேர்—சீரகமும்
மாதுளைவித் தோடுதென்னம் வன்குரும்பை காசினிவேர்
தீதகல நற்குடிநீர் செய். (௨௨)



RangaRakes tamilnavarasam.com

## கந்தகத்துக்கு மாற்று.

செய்யகந்தி தின்றோர்க்குச் செப்புவா யாவிரம்வேர்
தய்வேளை வேர்நீலி தன்மூலம்—துய்யசக்கு
நல்ல பருத்தியிலை நாகேச ரஞ்சமனு
மெல்லகுடி நீரட்டு வார். (௪௩)

வார்ப்பா மிளநீரில் வண்டா மரையிதழை
நேர்ப்பா யரைத்துவடி நீருண்பாய்—சார்ப்பான
நன்மிளகு நீலியின்வேர் நற்சீரகஞ்சமனு
மன்னீரிற் காய்ச்சியதை மாட்டு. (௪௪)

## மிருதாரசிங்கிக்கு மாற்று.

மாட்டுமிரு தாரசிங்கி மாதேயுண் டோருக்குக்
கூட்டுகுடி நெருப்புன்கின் கோத்தோலை—வாட்டமற
நன்னீரி லேயரைத்து நன்று வடித்துண்ணச்
சொன்னீ யவுரியின்வேர்த் தூள். (௪௫)

## மயில்துத்தத்துக்கு மாற்று.

நூளா மயிற்றுத்தஞ் சேர்வுடனுண் டோர்கட்குத்
தானான சம்பிரச் சாறுடனே—கோனாய்நீ
இஞ்சிநீர் தேனு மிரும்பஞ்ச தாரையுடன்
கொஞ்சமொழி யுண்ணக் கொடு. (௪௬)

## உப்புக்கு மாற்று.

கொடுப்பாய்நீ யுப்பிற்குக் குப்பைமே னிச்சா
றடுக்கான தாழைவிழு தாநீர்—குடித்திடுவாய்
சிற்றம்மான் பச்சரிசி சீரகத் தின்னலாம்
பொற்றொடியே சொல்வாய் புரிந்து. (௪௭)

## செம்பின் களிம்புக்கு மாற்று.

புரிந்திடுவாய் தாம்பிரத்தின் பொல்லாக் களிம்பை
அருந்தினிடி னமலகச் சாறுண்—பொருந்தவே
சம்பிர நற்பலத்தின் சாறுகு மேதியதன்
இம்புளித்த மோரொன் றிசை. (௪௮)

RangaRakes tamilnavarasam.com

### இருவங்கத்துக்கு மாற்று.

இசைப்பா யிருவங்கங் கொண்டோர்க்கு நல்ல
இசைப்பாங் கரும்பூ விலையைத்—தசைப்பார்
கருங்கோழி மாமிசமாங் காட்டுப் புளியாணை
நருவேரா மென்றேநீ நாட்டு. (௪௯)

### கொடிவேலிக்கு மாற்று.

நாட்டாய் கொடிவேலி நல்வேர் தனக்குநீ
கூட்டாய் நறுநெய்யைக் கூசாமல்—வாட்டமிலா
மாட மரைத்ததனை மாதே திலநெய்யில்
போடுவடை யாக்கிப் புசி. (௫0)

### சேரங்கொட்டைக்கு மாற்று.

புசிப்பாய்நீ சேங்கொட்டை போற்றியுண் டோர்க்கு
இசைப்பா மெயினைத் திலையை—விசைப்பாக
நன்று விடித்தாற்றி னன்னீரி லேகலந்து
குன்றுமற் பாண்டத்திற் கூட்டு. (௫௧)

கூட்டி யிளநீரின் கொண்டமேற் றோல்போக்கி
வாட்டமற முன்சொன்ன மாநீரில்—போட்டட்டு
நற்பருப்பை மூன்றின்று நன்னீர்பின் னுண்டக்கால்
பொற்கொடியே போமென்றே யோர். (௫௨)

### அரத்தபாஷாணத்துக்கும், இடுமருந்துக்குமாற்று.

ஓரரத்த பாளத்தை யுண்டார்க்கு மானேகேள்
பேரரத்தை நற்குடிநீர் பேசுவாய்—சீரா
இடுமருந்தைக் கொண்டோர்க் கியன்றகருஞ் செம்பை
இடுவிலைச்சாற் றைமாவி லீ. (௫௩)

ஈவா யிடுமருந்திற் கேற்றபெரும் பூசணிக்காய்
தாவாய்க் கடலையிட்டுத் தானட்டே—ஓவாமல்
ஐயவிகுப் நீக்கி யருந்துவாய் நீலியின்வேர்
மொய்குழலா யுண்மைமொழி. (௫௪)

மொழிந்திடுவாய் செங்காஞ்சி மூதிலையின் சாற்றைப்
பிழிந்தெடுத்து நெல்லவலிற் பெய்தே — செழுங்குழலாய்
தின்னப்போம் பச்சைச் செனிகையைத்தின் றூறும்பேர்
நன்னயமாய்ச் சொல்வாய் நயந்து. (௫௫)

RangaRakes tamilnavarasam.com

### சகலந்தீக்கு மாற்று.

நயப்பான வெந்தயமு நல்ல கறியும்
வியப்பா யரைத்தேவெந் நீரில்—கயற்கண்ணாய்
வெண்ணெயுடன் கூட்டி விழுங்கப்போ மெவ்விஷமும்
உண்ணுவாய் சின முவந்து. (௯௬)

துப்பாம் பொரிகாரந் தூய்க்கிற்போ சீவியின்வேர்
தப்பாம னீக்குமென்றே சாற்றுவாய்—ஒப்பாய்முன்
சொன்னாநஞ் சத்தனைக்குஞ் சொல்லுவாய் நீவியொன்றே
தின்னப்போ மென்றே தெளி. (௯௭)

### மாடு,செப்பு நெருஞ்சில் தின்றால் மாற்று.

தெளிவாய்நீ செப்பு நெருஞ்சிறனைத் தின்ற
ஒளிசேர் பசுவினுக்கோ வேமம்—அளியினரு
நல்லகத்தித் தோலுடனே நன்று யரைத்திட்டால்
தொல்லை விடர்கொலையுஞ் சொல். (௯௮)

### ஷை அலரிப்பழுப்புக்கு மாற்று.

சொல்லலரி யின்பழுப்பைத் தூய்த்த பசுவினுக்கு
வெல்லகத்திப் பட்டை விலக்குமே—அல்லல்செயும்
சோனைப் பயிர்தின்னின் தூய்யவத் தாமணிவேர்த்
தான்பூண்டு கொண்டுதண்டத் தாது. (௯௯)

### ஷை மிளகாய்ப்பூண்டுக்கு மாற்று.

ஊதுமிள காய்ப்பூண்டை யுண்ட பசுவினுக்குத்
தீதில் மிளகுமஞ்சள் சிரோமம்—ஓதகத்திப்
பட்டை தனையிடித்துப் பாக்காய்க் கொடுத்துவிடின்
விட்டோடு மென்றே விளம்பு. (௱)

விஷப்பிரதி விஷத்திரட்டு முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

உ

சிவமயம்.

சுந்தரானந்தர்செய்த

# ஆயுள்வேதப் பொதுலக்ஷணம்.

---

## பாயிரம்.

### கணபதி துதி.

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை
இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனைப்
புந்தியில்வைத்தடி போற்றுகின்றேமே. (௧)

### சுப்பிரமணியர் துதி.

தந்திக்கிளையனைத் தாமரைத்தாளனைப்
பந்தமறுத்திடு பன்னிருகையனைக்
கந்தக்குறத்தி கணவனை வேலனை
எந்தையையாளு மிறைஞ்சுதுமியாமே. (௨.)

### பரசிவ வணக்கம்.

ஐந்துமுகத்தனை யம்பிகைபாகனை
அந்திநிறத்தனை யாரணமெய்யனைச்
சந்த்ரமௌலியைத் தாணுவைச்சம்புவைச்
சந்ததம்போற்றியே சாருதுமியாமே. (௩.)

### நூற்பெயர் முதலியன கூறல்.

ஆயுள்வேதமே வேதமா மஃதெவ்வா றென்னின்
ஆயுவிடடை வோர்கண்மா னிடர்களே யல்லால்
ஏயவேறிலை யவருடல் வீந்திடா தியற்றத்
தாயகன்மருந் துரைத்தலா லாமெனச் சொல்லாய். (௪)

மூன்றுகண்ணுளோ ரிருவரா மியாரெனின் மூன்று
ஆன்றலோகமீன் றளிப்பவ னாகிய வரனும்
தோன்றுமப்பொருட் டெரிணைப் போக்கிடு வோனும்
ஏன்ற மாமருத் துவனுமே யெனவியம் புவரே. (௫)

RangaRakes tamilnavarasam.com

மருத்துவத்தொழி லியற்றுவோர் வரப்பிணு லவற்றின்
கருத்தறிந்துபின் மருந்தியற் றிடல்கட னென்பார்
திருத்தவப்பெரு நூல்களின் றிறந்தெரிந் திடுதல்
வருத்தமாதலாற் பொதுவகை வகுப்பதிந் நூலாம். (சு)

அளவைதெய்வத மாம்பொருளல்பொருள் காலம்
எளமதாகிய பொருள்களின்பலன்செயல் வகைகள்
விளையுநோய்வகை தீவகை புடவகை விளங்க
அளவதாயுரைத் திடும்பொதுநூலிதென் றறைவார். (எ)

### பண்டிதரியல்பு கூறல்.

பண்டிதன்பரி காரிநல் வைத்திய னெனப்பேர்
கொண்டவன்பர னருமைப்பெயரினைக் கொண்டோர்
மண்டலத்தினி லாயுள்வே தந்தெரி மாந்தர்
எண்டிசைபுக ழெழுபிறப் பளவுமெண் ணுவராம். (அ)

### வேறு.

தெய்வந்தன்னை வழிபடுசிந்தையும்
பொய்யிலாமொழி யுறற்புலமையும்
ஐயமற்ற வறிவும்பெருமையும்
வெய்யகோபம் வெறுப்புமிலாமையும். (கூ)

உயிர்கண்மீது கிருபையு மோகையும்
செயிரகற்றிடு சிந்தையுமீகையும்
அயர்விலாமையு மன்புநிறைந்துளன்
உயர்வதாகிய வொப்பின்மருத்துவன். (க0)

### வேறு.

நாடியாதியென் குறிகளை நன்குற நோக்கல்
பாடதாகுமுந் நோய்களின் பேதத்தைப் பார்த்தல்
விடுநோயெனின் தகுமருந் தெண்ணியே யியற்றல்
ஈடிலாமருந் தின்விலை யீந்தபின் னீதல். (கக)

பொருளிலார்களேனுந் தீப்பசி பணிப்பிணைப் போக்க
அருளிலாமலே பொருளுடையோர்கள்பா லீட்டித்
தெருளுநன்மருந் துணைகில்தீதற வளித்தல்
மருளகற்றிடல் மருத்துவர் கடனென்பர் மன்னோ. (கஉ)

RangaRakes tamilnavarasam.com

இருவர்வந்தழைத் திடினவரிற்புகா திருத்தல்
கருதுநற்சகு னத்தினைக்கண்டுசென் றிடுதல்
மருவுநோயினர் மஞ்சமாதியதொடா திருத்தல்
அருகுகிட்டிகைசை முகமுற வாசனத் திருத்தல். (கங)

கருவியேபிணி யாளனுமவன் கரம்பற்றின்
வருவதாந்தொடக் கென்றனர் மாற்றிடு வகைதான்
பெருகுநீரினின் மும்முறை பெட்புற மூழ்கல்
தருகைதாள்கழல் தரையின்மூ விரல்களைத் தட்டல். (கச)

மந்திரத்தினீர் தெளித்திடல் வத்திரங் களைதல்
அந்தமில்லதோ ராக்கினே யக்குளி யாடல்
சுந்தரம்பெறு மஞ்சணீர் தெளித்திட றேமில்
இந்நால்வகை யியற்றுதல் கடனென வியம்பாய். (கரு)

ஆயதாய்தந்தை தருதெய்வ மனைத்துநீ யென்றே
நேயமெய்ம்மையா மன்பொடு நிறைவுறு மனத்தின்
வாயவெம்மருந் தாயினு மீந்ததைச் சுருதி
நாயகன்றரு வமுதமீ தாமென நயந்தே. (கசு)

உண்டிடத்தியஞ் சொற்றிடு முறைப்படி புனற்றி
கொண்ட நோய்த்திறம் படிநின்றிக் குறைவறக் கூறிக்
கண்டபோதெலா மொன்றதாக் கருதுவோர் தமக்கு
மண்டலம்புகழ் மருத்துவர் பண்டிதம் பெருக்க. (கஎ)

தந்தைதாய்முதற் றம்மனோர்க் குற்றநோய் போலச்
சிந்தைகொண்டொழு திறத்தொடும் வைத்தியஞ் செய்க
முந்துநூலுணர் முதறி வோரொடு முயங்கி
நந்தலின்றியே நன்மருந் தாகிய நயத்தல். (கஅ)

### மாத்திரைக் கல் முதலிய இயல்பு கூறல்.

பகருமாத்திரைக் கல்லதோ மாயனும் பண்பார்
நிகரில்சந்திர னிறைவனுங் குடிநன் னமுதாம்
நகலிலாதவை சாற்றும்வை குந்தமாந் தாழ்வில்
இகலிலாகிரன் மூன்றுமும்மூர்த்தியா மென்பார். (ககூ)

அரைகன்மாயவன் றாபில்கொளு மமுதவா ரிதியாம்
உரமதாகிய குழவிமந் தரவரை யுயர்நீர்
வரைகொளோட்டி மதிப்பவ ரிதியின் மைந்தர்
திரையிற்றோன்றிய வமுதமே மருந்தெனச் செப்பாய். (உ0)

RangaRakes tamilnavarasam.com

### கலுவத்தின்தணைக் கூறல்.

கருமைசெம்மையதாகிய கற்களைக்கொண்டு
உரிமையாய்ச்செயுங்கலுவங்க ளுத்தமமாகும்
பெருமையாம்வெள்ளைக்கல்லினு லியற்றுகலுவமதோ
அருமையாமருந்தின்பால் வைத்தரைபிலதீத. (௨க)

### கலுவத்தண்டியின் தணைக்கூறல்.

இருப்பினாற்கலுவத்தண்டு பொருளியற்றின்
கருப்பினால் மருந்தின்குணஞ் சுருக்கிடுமுருக்கு
விருப்பதாகியவெள்ளியு மூத்தமம் விருட்சம்
மருப்பினாற்புரிகருவியோ மத்திமகுணமாம். (௨௨)

### மண்டலநாள் வேருகடி அளவை கூறல்.

மண்டலம்மது மண்மகளுரையில் வதியும்
நன்றதாகுநாள் நாற்பதின் மேலெந்தாய் நவில்வர்
கொண்டிடப்பெரு கடியதுவிரல் கொள்ளும்
பண்டமென்பதே யாமெனப் பகர்ந்தன ரன்றே. (௨௩)

### மருந்துகொள்பாத்திரங்கூறல்.

வெள்ளிப்பாத்திர மருந்துளலாகுமே மேலா
யின்னுசெம்பொனே மிகுபயனீயுமே மண்ணால்
கொள்ளுபாத்திர முத்தமங்கூறிய பொருட்கே
யெள்ளுவெண்கல மத்திமமாமென விசைத்தார். (௨௪)

### பாத்திரச்சிமிழ்கூறல்.

வெண்பொன் செம்பொனு லியற்றிய சிமிழதுமேலாம்
பண்பில் செம்பிலுஞ் சிறுளாம் பரணியின்மருந்து
பண்பதன்றுதெங்கின்சுரை யுத்தமமாய்வேய்
நண்பதாவிலங் கின்மருப் பிவைகலஞ்சிறிதே. (௨௫)

### பேதிகொள்ளுங்காலமு மருந்துங்கூறல்.

கோடைகாலத்தின்விரேசன மென்னைய்நற்குடிநீர்
வாடைகாலத்திலவைகொளின் தேகவாதையதாம்
காடுவாயுப்பு வாளமா தியபொருளையகத்
தீடில்லாமருந் தெப்பொழுதும்பெறவியம்பே. (௨௬)

RangaRakes tamilnavarasam.com

### பொருள்களின் ரசங்களை விபரங்கூறல்.

அகலிரசங்களைபொருள்களி றான்றியதாகும்
புறவிரசங்களை பொருள்களண்டி பிருதிவென்றுள்ளி
தாவரியுள்ளனவாகிய பொருள்களுக்கெல்லாம்
விரண்டுசெய்விட நீக்கில் அந்நியமாய்விளம்பே. (௨௬)

### மூலமுதலிய கூறல்.

மூலங்கூறிட்டாப்பொருள்கள்ச மூலமாம்வருத்துச்
சாறும்பாகமதனைறந்திட்டாப் பொருள்சமபாகம்
காலங்கூறிடாமருந்துகொள் காலமுதனாளாம்
லைப்பத்தியம் புகல்கிலா விடினிச்சாபத்தியம். (௨௭)

### நாழிமுதலிய அளவைகூறல்.

ஆயுள்வேதியரானைறந்தனர் நாழியினளவை
யயசாற்சதத்தொடியென வித்தொடிக்களவோ
தாயருன்றிமுந்நாற்பறு பாலெனத்தொகுத்தார்
ஆயநாழியென்னுலதே குருணியினளவே. (௨௮)

### மருந்துசெய்காலங் கூறல்.

கானத்துற்றவான் கோடைதிபலன்கொளுங்காலம்
தேனுருத்திரைதமதி யாதிமாசியதாம்
ஆனவம்மதிப்பாதியி னளவுமேயய்நான்
வானநன்மருந்தினோர்கர் மருந்தியற்றிடுவாய். (௩௦)

### மருந்தின்வயது கூறல்.

சூரணங்கூடியமாத்திரைக் கண்டதொன்றாகும்
நீருமெண்ணெயின்வயதுடன் னிருமதிசுழ்ந்தல்
கேளுமேலெயக்கிருதமீ ராண்டெனக்கினக்க
ஆருநற்றைலத்திணுக்காண்டு மூன்றறைவாய். (௩௧)

றாறதாகுமே பற்பத்தின் வயதின் முக்கால்
விருமிந்தூர மாகுமே பதங்கமேராப்பத்தாம்
தேருமன்றதா யுருக்குமாத் திரைசகுமடக்கள்
சீழுமின்றநற் குழம்புமோ ரைத்தொகைச்செப்பாய். (௩௨)

RangaRakes tamilnavarasam.com

### மாத்திரைகளின் பலன்கூறல்.

அரைப்பு மாத்திரை காற்பலன் சுருக்கரைப்பலனும்
தருக்கி டும்புடமாத்திரை தான்முக்காற் பலனும்
உருக்கு மாத்திரை யுயர்புடமாத்திரைக் கொன்றும்
திருக்கறுத்திடுசெந்தூரம் பற்பமொன்றரையாம். (கூகூ

### தீயினளவும் பெயருங்கூறல்.

விளக்கையொத்திடு தீயதுதீபமாமேலிக்
குளத்தினம்புயப் பூநிகர்தீகுளிர்கமலம்
தளத்தகன்னியின்பூநிகர் தீதவிர்க்கதலி
வளத்தகாட்டுறு தீயதே காடவன்னிபதாம். (கூச

### புடவகை கூறல்.

ஆயிரம்வறட்டிகூடி னனையின்புடமதாகும்
நேயமோடைம்பான்சேரி னேனைப்புடமாமென்பர்
ஆயவோராறுகூடி னறைவர்க்குட்டமாமென்றே
தூயமூன்றுளின்மாதே சொல்லுவாய்காடையென்றே. (கூரு

### எருவினளவு முதலிய கூறல்.

எருவினதகலஞ்சாண்மே லங்குலமூன்றதாகும்
பருமனோர்விரலதாகும் பகருவாயிரமற்ற
சுரபியின்சாணமுன்னுஞ் சொன்மேதிச்சாணம்பின்னும்
விரவுசாணத்தாற்செய்த வியனெருக்கடையதாமே. (கூச

வனத்திடுவறட்டியிட்ட மருந்ததுசிறந்ததாகும்
கனத்தகாராட்டின்சாணக் கடுவேகமருந்திற்கேயும்
மனைப்படுவறட்டியாலே மங்குமேமருந்தின்வேகம்
நினைத்திடாயமூகஞ்சாண நீக்குவாய் மருந்திலுக்கே. (கூ

### விறகின் தணமும் விதமுங்கூறல்.

வெண்பா.

மெய்யாஞ் சரப்போக்கு மேலாங் கஷாயமதை
எய்யாமற் காய்ச்ச வெரிவிறகு—ஐயாகேள்
சீரான செவ்விலந்தை சிற்றமுட்டி யாவாரை
நேரான வூஞ்சலென்பாய் நீ. (கூ

RangaRakes tamilnavarasam.com

வாதப் பிடிப்பதனைவாட்டுங் கஷாயமதைப்
போதப் புளிவேம்பு பூவரசு—மாதேகேள்
நல்லி லுப்பை யில்லைவந்தி ரூட்டு விறகிலொன்றில்
வல்லமையாக் காய்ச்சி வடி. (௯௯)

கூறும் விறகிலொன்றைக் கூட்டுவதே யல்லாமல்
வேறுவிற கைக்கலந்து மேவாதே—ஊறுசெயும்
தக்கவிற கைத்தெரிந்து தானெடுத்திங் கொவ்வொன்றே
எக்குடிநீர் கட்டு மிடு. (௱)

பட்ட விறகிற் பயனில்லைப் பன்னுன்முன்
வெட்டும் விறகு மிகுபயனில்—திட்டமுடன்
பச்சை விறகு பயன்போக்கு மும்மதிமுன்
எச்ச விறகை யிடு. (௱௧)

வயிர விறகால் வளருமே வெப்பம்
செயிரான பட்டைதின வாகும்—உயிரீயும்
சாலியுமி நேர்மைதருஞ் சாற்றுஞ் சருகோசொல்
பாலமொழி யேபயனு மில். (௱௨)

சுட்ட கரியாற் சுரக்குமே யெப்பயனும்
தட்டும் வறட்டியினாற் றன்பயனென்—இட்டமுறு
வேலியமென் னைப்பிருத நேர்த்தியா யோர்வருககம்
ஆகுவிற கானீ யடு. (௱௩)

## கஷாயத்தின் பிரிவு முதலியகூறல்.

அடைகஷா யத்தி னளவுநாளாமூன்றதா மொருநாளா
இங்கஷாயத்தி னளவிருவேளையா மியம்பின்
படியிலொவ்வொரு வேளையுமடுவதே பாகம்
அடுகையோர்படி யட்டமத்தொன்றதா வருக்கல். (௱௪)

எவ்வகைக்குடி நீர்கட்குமொட்டொன்று வருக்கல்
செவ்வையாமென்ப தீயிடுமுறைவன் முதற்றீ
எவ்வகைக்கிய கதலிதாமரைவிளக் கென்ப
நவ்விநோக்கிநீ சருக்கதுமிம்முறை நான்கே. (௱௫)

## இச்சாபத்தியத்தில் நீக்கும் பொருள்கூறல்.

கடுகுநற்றிலத் தெண்ணெய்கூழ்ப் பாண்டங்கள் கடலை
வடுவதாகிய தெங்குமாவருக்கைகற் காயம்
மடியிலாதவெள் ளுள்ளிகொள்புகையிலை மதுபெண்
இடறுபாகமோ டகத்திகீ ரிட விச்சா பத்யம். (௱௬)

RangaRakes tamilnavarasam.com

ஷை ஆதம்போநன்.

பருவரால்கருங் குறவைதேள் மீனினைப் பருகல்
உரியவுள்ளன்காட் டெப்புற் கபிஞ்சலங் கலைமான்
பெரியவெள்ளையின் றசைபசும்பாலெய்மோ ரிதலாம்
அரியசம்பிரப் பழத்தின்சாறருந்துத லாமே. (சஎ)

[illegible]கூறல்.

கடுமையமிக்கிடு பத்தியமட்புனுக் கலத்தில்
அடுகைசெய்துண லுவரிநீர்புளிகிழ லவிர்கால்
படுகைமெய்பினி விலாவலைகபடுத்திட லுவர்மண்
தொடுகையாதிய நீக்குதலென்பபலர் சொன்னார். (சஅ)

கடும்பத்தியங்கூறல்.

கடுமையென்றிடு பத்தியமுவர்வறுத் துண்டல்
அடைவிலாமறு பத்தியநறுவர்வறுத் தருந்தல்
கொடுமைசெய்புளி தனைச்சகட்டுக்கூட்டிட லன்றிப்
படியில்கத்தரி சிக்குருப்பிஞ்சினைப் பருகல். (சகூ)

மருந்துதின்றிடின் பத்தியம்வகுத்திடா விடினும்
அருந்தலாகிடாப் பொருள்களையகற்றலே வேண்டும்
பொருந்திடாதுபெண் போகமோர்மருந்துக்கும் புவியில்
வருந்துவோருட லயிர்துபத்தியந்தனை வகுப்பாய். (ருய)

பத்தியங்கொண்டோர் தூங்காக்காலங்கூறல்.

பத்தியங்கொண்டபேர்கள் பகற்றுயில்கொண்ட காலைச்
சித்திரபானுவெப்பஞ் செப்பிடுமருந்தின் வெப்பம்
பத்தியச்செயலின்வெப்பம்பகருசித்திரையின் வெப்பம்
இத்தனை வெப்பங்கூடி னியதுநோய்க்களவின் றென்னே. ()

மாந்தர்செய்யும் செயலும் செய்யாச்செயலுங்கூறல்.

நாளோர்நான்கினி னற்றலைமுழுகுதல்
நாளோரெட்டினி னெண்ணெயிர்க்குதல்
நாளோரெட்டினி னங்கையைக்கூடுதல்
நாளோர்மூன்றினி னற்கிழிகுமிடல். (ருஉ)

RangaRakes tamilnavarasam.com

நீரைச்சுண்டிடக் காய்ச்சிநெய்யட்டுனால்
மோரைநீர்ற் பெருக்கிமுயங்குதல்
கூரைமாசு கொளாமலுடுத்திடல்
நேருநோயினை நீர்மலநீங்குதல். (௩௩)

இரவிலன்றிப் பகலுறங்காமையும்
விரவியுண்டபின் வீறுணும்வேட்கையும்
பரவியுண்டுபெப் பத்தடிபேகலும்
உரமதாகிரு சாமமுறங்கலும். (௩௪)

கந்தமன்றியோர் கந்தமுறாமையும்
மூத்தமாதர் தனமுயங்காமையும்
அந்தநாட்டிரு மாப்பைக்கனி
பந்தமாகப் பருகலிலாமையும். (௩௫)

பகலின்மாதரைக் கூடுதலின்மையும்
இகலிரற்பசி யின்றியுணாமையும்
தகவில்வெண்ணெய் தனையருந்தாமையும்
மிகுமிளவெயின் மேனிபடாமையும். (௩௬)

இடங்கைகீழிட் டுறங்கன்மூன்றுளினில்
அடுக்கறிவையுண் ணுமுன்றுட்டயிர்
படுமமுதிலீ தென்னப்பருகிடல்
கொடுநற்பேதி மதிநான்கிற்கொண்டிடல். (௩௭)

நாறுபூமொக ராமைமநுசி
வீறுமுண்டி யறுந்தருணத்தினைத்
தேறிப்பெண்களைக் கூடுதலின்மையும்
கூறினெப்பொரு ளுண்டபின்னீருணல். (௩௮)

எண்ணெயிட்டுவெந் நீரினின்மூழ்கையும்
வண்ணவான்பால் மகிழ்ந்தினிதுண்டலும்
திண்ணமாமல நீரடக்காமையும்
பண்ணுபாக மழிபதநீக்கலும். (௩௯)

பாரில்வைகில் பகருமணவினில்
சாரநித்திரை தான்புரியாமையும்
நேரதாமிந் நியதிபுரிந்தவர்
பேரைக்கூறப் பெரும்பிணிபாறுமே. (௪௦)



RangaRakes tamilnavarasam.com

ஒன்றோர்போதினி லுண்டவன்யோகியாம்
நன்றதாயிரண் டுண்டவன்போகியாம்
துன்றுமூன்று பொழுதுண்டோன் ரோகியாம்
அன்றிமேலுண்டோ னும்பலரோகியே. (௬௧)

எண்ணெய்கொள்ளுநாள் முப்பதாமாண்டினு ளென்ப
வண்ணமேலியங் கொள்வதுமேலொரு பத்தாம்
திண்ணச்சிந்தூர மறுபதாமாண்டினுள் திங்கட்
பண்ணுபற்பநா லைந்தின்மேற்பருகனு முண்டே. (௬௨)

உண்பொருள்களின் சீரணகாலங்கூறல்.

பாசினின்மாந்தருண்ணும் பண்டமென்றுரைப்ப வெல்லாம்
சீரணமாகுங்காலந் தெளியவேசெப்பக் கேள்நீ
காரரைசமேமோரேழு கன்னலாங்கற்கஞ் செய்நீர்
வீரணத்தண்ணீர்சாம மினவெந்நீரண்டே சாமம். (௬௩

சாலவேகாய்ச்சியாறுஞ் சலம்பதமூன்றே முக்கால்
சீலநற்குடிநீர்மூன்று சிற்பழச்சாறோ ராறும்
எழுஞ்சோற்றிரண்டுசாம மியன்றபாலிருபான் கன்னல்
பாலேமோர்மொழியாய்த்தேனே பன்னிருகடிகை யாமே. (௬௪

வார்பொருந்துயிருஞ்சோறு மாள்கன்னல்பன்னொன்றாகும்
மோரிடுபதப்பன்மூன்று மொழிந்தபாலிரொன்பானும்
ஆறுவச்சோற்றேழா மவிர்வெறுமமலையம்மேத
பார்வெண்ணெய்ச்சோறோர்சாமம்பருக்கந்தமெல்லாஞ்சாமம்

உரைபிலைக்கறிதண்டாதி யுண்டிடிலொன்றுஞ்சாமம்
விரைகளும்பழத்தின்சாறும் வெந்திடிலோர்சாமந்தான்
உருசியாறுளவவற்றை யொளிர்பச்சையாத்தின்றாலும்
கரையில்வெந்திடத்தின்றாலுங் கடிகையைந்ததன்மேலில்லை

காவிகோர்கண்ணாய்சொன்னேங் கழுகுநீர்காடிக்கைந்தாம்
மாவுண்டைபொங்கலப்ப மன்னியகெய்பாலான்மோர்
மேவியேகூட்டியுண்ணின் விளம்புவாயிருபான்கன்னல்
மாவடுவருக்கைவாழை வளர்கன்னல்வகைக்குப்பத்தே. (௬

வர்த்திக்கும்வடித்தகஞ்சி வகைதனக்குரையோர்சாமம்
தித்திக்குந்தெங்குகன்னல் செழும்பனைவெல்லந்தின்னில்
உற்றிடுமிருபான்கன்ன லுயர்புழுக்கின்புழுக்கல்
சொற்றனமிரண்டுசாமஞ் சோர்விற்பச்சரிசிமூன்றே. (௬

RangaRakes tamilnavarasam.com

சூரணந்தயிலம்லேகங் கிருதம்பன்னிரண்டாங்கன்னல்
சீரியபழங்களெல்லாஞ் சீரணஞ்சாமந்தன்னில்
கூரியநறிகளெல்லாங் கூறிலோர்சாமமென்றே
சேருசிந்தூரம்பற்பஞ் சீரணமரைச்சாமத்தில். (௬௬)

இளநீர்சர்க்கரைபானக்க மெழுநாழிகையிற்செரிக்கும்
வளமுறுதயிரின்மேலும் வார்த்துணுமோரின்மேலும்
தெளிவுறுதண்ணீருண்ணச் செரித்திடுங்கடிகையைந்தில்
தெளியகற்பொரிமாகீருஞ் செரிக்குமோர்சாமந்தன்னில். (௭௦)

கட்டவெந்நீருண்பார்க்குச் சொல்லுவாய்சாமமென்றே
மட்டிலாதட்டவெந்நீர் வருக்கிலோர்சாமமாகும்
அட்டமாய்க்காய்ச்சியாறு மவிர்தண்ணீரிருபான்கன்னல்
வட்டவேல்விழியினாளே மருவுபாயசமீர்சாமம். (௭௧)

தருசெடிகொடிபூண்டாதி சாற்றுபூகாய்கொழுந்து
அரிவையேயுண்ணிற்சாம மதனிற்சீரணமாஞ்சொன்ன
திரவியவகைகட்கெல்லாந் திருமிகுவேதஞ்சொன்ன
குருபரனடியைப்போற்றுங் குறுமுனியுரைத்தவாறே. (௭௨)

### பாண்டத்தைக் கூறல்.

ஓர்மருந்துசெய் பாண்டமோர் மருந்திணுக்கொருவல்
சீர்தருமட் பாண்டமே சிறப்பெவற்றினுக்கும்
தேருநாய் தைலத்தினிற் கயத்திற்செய் பாத்ரம்
சேருலோகத்தி லியம்பூசியகலன் சிறிதாம். (௭௩)

### முத்தருக் கூறல்.

உற்றவாண்மர முள்ளைவரம்முடைமரமாம்
சுற்றிநல்வயி ரம்முளமரம்பெண்ணாச்சொல்ப
பற்றிடும்வயி ரம்பிலா மரத்தினைப்பகரில்
நற்றவம்பெருவலியென நாட்டுவர்பெரியோர். (௭௪)

### முந்நீர் கூறல்.

ஆற்றுநீர்பல தருக்கள்மன் படிவஃதநிகம்
ஊற்றுநீர்மண்ணின்குணமொன்றே யாதலினரையாம்
தோற்றநன்மழைநீரதே நீரதாமென்ப
சாற்றுவார்குணமிம்முறை யாமெனத்தானே. (௭௫)

RangaRakes tamilnavarasam.com

### மும்மலர் கூறல்.

பூவதேபிஞ்சதாகிய மலர்கள்பூப்பிஞ்சாம்
பூவினொடுபிஞ்சுளமலர் பிஞ்சுப்பூவாகும்
பூவதேயன்றிப்பிஞ்சிலா மலர்வெறும்பூவாம்
பூவினின்குணமூவகை யாமெனப்புகல்வர். (எசு)

### மும்மூலங் கூறல்.

வேரதேகிழங் கன்றிவே ரல்லதுகிழங்காம்
வேரகத்திலும்வெளிப்புறங் கிழங்குவேர்க்கிழங்காம்
வேரதேயன்றிவே றில பொருள்கள்வேரென்ப
வேரின்பேதமூன்றுமென விளம்பினர்புலவர். (எஎ)

### கொடிகளின்வகைகூறல்.

கொடிகளின்வகையிரண்டெனக் கூறுவரவைதாம்
படியில்பற்றுகையில்லது சுற்றெனுங்கொடியாம்
நொடியில்பற்றுகையுள்ளது பற்றெனுங்கொடியாம்
படியிலோடதிகொடிசெடி பூண்டுபன்மரமே: (எஅ)

### முந்நோய் கூறல்.

சாத்தியம்மெனுநோயது வுடன்றணிவெய்தும்
சாத்தியம்மிலாநோயது வுடனுயிர்தணத்தும்
சாற்றும்யாப்பியநோயது சாகுநாளளவும்
ஆற்றத்துன்பமேதருவதல் லாதகலாதே. (எகூ)

### உறுப்பைப்பற்று நோய்கூறல்.

தோலைப்பற்றியேசார்ந்திடு நோயதேயென்றும்
ஏதுநாற்றசைதனைப்பற்றி யியலுநோய் நரம்பின்
காலைப்பற்றியேபொருந்துநோய் மூளைபற்றியநோய்
வாலதாகியவெலும்பைப்பற் றியதெனவகுப்பார். (அ0)

மேலதாகியவங்கத்தைப் பற்றியேவிளங்கும்
ஏலதாமதோவங்கத்தைப் பற்றியேயியலும்
தாலமாயிருவங்கத்தைப் பற்றியேதுன்றும்
ஆலநேருநோய்மூவகை யாமெனவறைவர். (அக)

### பஞ்சமலங்கூறல்.

ஆமலகத்தி னைந்துபேதங்களாமறைவோம்
தோமில்நெல்லிமா துளிவிளாசொற்பெறுமிலந்தை
சேமநல்லெலுமிச்சையோ டைவ்வகைதெரியாய்
ஆமதாம்பித்தமகலுமேயிவற்றின்பேரறையின். (அஉ)

RangaRakes tamilnavarasam.com

## நீர்கடே, நீர்பலே, பஞ்சமூலங் கூறல்.

முக்கடுகெனிசுண்டி கறியெனமொழியலாமே
தக்கமுப்பலைநற்றான்றி சார்கடுநெல்லியென்ப
தொக்கனைவம்மூலஞ்சுக்கு கொடிவேலியரத்தைசெவ்யம்
பக்குவமானகண்டு பறங்கியாம் பஞ்சமூலம். (௮௩)

## நோயில்லாதவர்களுக்கு நாடிக்குணங்கூறல்.

வாதநாடியும் வன்பித்தநாடியும்
சேதமுற்ற சிலேத்துமநாடியும்
ஓதிடுமோன் றிரண்டுகாலோடிடில்
சேதஞ்செய்யும் பிணியறுதேகமே. (௮௪)

## நாடிபார்க்குங் காலங்கூறல்.

சித்திரைவைகாசிக்குச் செங்கதிருதயமாகும்
உத்தமவானியாடி யாரலைப்பசிமதிக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிமகரமாசி
அத்தமனத்தின்கால மாமெனவறைந்தார்முன்னே. (௮௫)

பங்குனிமதிக்குநல்லோர் பகருமாவணிமதிக்கும்
பொங்கமாம்புரட்டாசிக்கும் புகல்நிசிகேவிலென்றே
துங்கமோநாடி மூன்றுஞ் சோர்வறவிளங்குமென்று
இங்கிதமாகமுன்னே ரியம்பியவாறதாமே. (௮௬

என்னெயிட்டிருக்கும்போது நீரமோடிருக்கும்போதும்
உண்ணுதல்செய்தபின்னு முயர்பசியுற்றபோதும்
திண்ணமாய்நடத்தலோடல் சிறந்தபோகஞ்செய்பின்னும்
கண்டுயில்கொண்டபோதுங் கலங்கிடுநாடிதானே. (௮௭)

## அஷ்டதானங் கூறல்.

அட்டமக்குறியாமென்ப ரங்கைகண்முகம்பண்ணுக்கு
விட்டிடுமலநீர்தேகம் விளம்புமிவ்வுறுப்போரெட்டாம்
இட்டமாநாடிபார்க்க வியம்புநூலதிந்துகொண்டு
மட்டிலாவியாதிபேத வகைபினைத்தெளிகவன்றே. (௮௮)

## ஆயுள்வேதப் பொதுலட்சணம்

## முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

உ

சிவமயம்.

# திருமூலர் நாடியந்தாதி.

## நூல்.

உற்றனிவர மூறுதியாமெந்நந்தி
பற்றியமூலம் பகர்ந்திடுநாடிதான்
எற்றியேயெண்ணிடி னெழுபத்தீராயிரம்
மற்றுதிற்பத்தும் வளமானநாடியே. (க)

வளமானபத்தில் வழங்குதசவாயு
உளமாமிடபின்கலை சுழியென்றனர்
களமானசக்கரங் காட்டியதாறன்றி
தளமானமண்டலந் தான்மூன்றுபாருமே. (உ)

பாருமிடகலை பின்கலைமாறியே
சாரும்பொருளிரற் காலொடுநாளேறிக்
காருங்கழுத்திற் கபாலவரைநின்று
வாருமிடமா வலக்கரஞ்சாருமே. (ங)

வலக்கரந்தன்னில் வளமானபின்கலை
நிலைக்கவிடக்கர நின்றதிடகலை
துலக்கிடுமையஞ் சுழிமுனையோடிடும்
பிலக்கவிம்மூன்றுப் பிறந்ததுதாதுவே. (ச)

தாதுமுறையே தனியிடகலைவளி
போதுறுபின்கலை புகன்றிடும்பித்தமாம்
மாதேசுழிமுனை வகுத்திடுமையமாம்
ஓதுமுறைபார்த் துணர்ந்தவர்சித்தராம். (ரு)

உணர்ந்தவபான னூற்றிடும்வாயுவில்
புணர்ந்தபிராணன் புகும்பித்தந்தன்னிலே
அணைந்தசமான னடங்கிடுமைதனில்
இணைந்திவைமூன்றி னியன்றகுறிகேள். (சா)

RangaRakes tamilnavarasam.com

குறியாண் வலக்கரங் குவிந்த பெருவிரல்
மறியாத தன்கீழ் வைத்திடு மூவிரல்
பிறியாத தற்சனி பேசிய வாதமாம்
அறிவாய் நடுவிர லாமது பித்தமே. (௭)

பித்தத்தின் கீழே பிறங்கிடு மையமாம்
உற்றுநீ பார்க்கி லோர்நாடி யேயோடும்
பற்றிய மூன்றும் பாயும் வேகத்தால்
மத்திமைத் தாளம் போல்வழுங் கிடுமே. (௮)

நாடியினளவு.

வழங்கிய வாத மாத்திரை யோரரை
தழங்கிய பித்தந் தானொரு மாத்திரை
அழுங்குங் கபந்தா னதுக்கா லோடிடின்
உழுங்கிய வுடலுக் கோர்குறை யில்லை. (௯)

நாடி நடை.

இல்லையே வாத மெழினடை கோழியாம்
எல்லை பிற்பித்த மெழும்புத் தவளைபோல்
ஒல்லையே யையப மூர்ந்திடும் பாம்புபோல்
வல்லையே கண்டறிந் தவர்கண் மாசித்தரே. (௧௦)

அறிந்திடு வாத மடங்கு மலத்தினில்
பிறிந்திடு பித்தம் பேராஞ் சலத்தினில்
மறிந்திடு மையம் வளமான விந்துவில்
உறைந்திடு மூன்றுங் குறவார்த் தலமிதே. (௧௧)

உறவாங் கறுப்புஞ் சிவப்புமாம் வாதம்
திறமான பச்சை நிறங்கொளும் பித்தம்
நிறைவான வெண்மை நிறத்த தையமாம்
அறைகுவர் மூன்றி னவிர்தலங் கண்டே. (௧௨)

தலங்காட்டி யிந்தச் சடபஞ்ச பூதம்
நிலங்காட்டி நீர்கால் நின்றதீ காட்டி
மலங்காமல் வான வெளிகாட்டி யங்குக்
குலங்காட்டி நீங்காக் குடியிருந் தனவே. (௧௩)

இருந்தவிவ் வைந்தா லியன்றதே சரீரம்
பிரிந்தாற் றசையோ பிரிதிவின் கூறாம்
சொரிந்திடு சோரிநீர் சொல்லரப் பென்றே
வருந்திடு வன்னி வளமாம் வெதுப்பே. (௧௪)

RangaRakes tamilnavarasam.com

வெதுப்பதாக விப்பெட்டுளாசியில்
எதிர்ப்புற்றுநிற்கு மென்பதாம்வாயு
கறுப்பொத்தவெல்லாங் கனத்தின்சார்பால்
விறுப்புற்றமேவும் விளம்பின்வளப்பமே. (கரு)

வளப்பங்கேள்பூமி வாசிக்குராசியில்
களப்பெருவன்னி தானாருங்கண்ணினில்
அளக்கறுமப்போ வடங்கிநாவினில்
பளக்கறுகாலோ பரிசித்தியங்கும். (கசா)

இங்கியல்காவி லிருந்தாறுங்குண்டலம்
பொங்கியவைந்தனுள் பொல்லாவிம்மூன்றுமே
தங்கியவாய்வு சமர்த்தன்மூலாதமாம்
பங்கியவன்னி பகுத்திடும்பித்தமே. (கஎ)

பகுத்தசலத்தில் பாரிக்குமேயையம்
வகுத்தவிம்மூன்றால் வளருநோயெல்லாம்
அகக்கணற்கண்டே யளவிட்ட யோகிகள்
வகுத்தேயிம்மூன்றின் வளமறிவாரே. (கஅ)

## வாதபித்தசேஷ்மத்துணைக் கூறல்.

அறியவிம்மூன்றி னளவையெந்தி
வறியநல்வாதம் வகுக்குங்குணங்கேள்
குறிகொளுங்கைகால் குளிச்சுநற்சந்து
பறிவுறுவிலாவும் பச்சைப்புண்ணுமே. (கக)

புண்ணுவலிக்கும் பொருமும் வயிறுதான்
துன்னுமலத்தைத் தான்கட்டும்பின்னும்
ஒன்னுணசகன முறவேசுருக்கும்
பன்னுங்குளிராம் பகுத்திடுவாயே. (உ0)

பகுத்திடும்பித்தம் பலபலவெண்ணமாம்
வகுத்திடும்வாக்கியும் வாயினீருறலும்
தகித்திடுமேனியைத் தயங்கிடச்செய்யும்
மிகுத்திடுதவன விடமெனகைக்குமே. (உக)

விடங்கியவைய மேனிரைப்பேற்றிடும்
தடங்கியிருமித் தனிவிலாநொந்திடும்
அடங்காச்சுரமிகு மன்வருகோழையாம்
இடங்கிரல்வற்றி யிரத்தமுங்கக்குமே. (உஉ)

RangaRakes tamilnavarasam.com

கக்கிபமூன்றின் கனத்தடலங்கேள்
ஒக்கியவாயு வுடனினிற்கூடிடில்
மிக்கபலனு மேனிசீரிற்படின்
சிக்கியரோகஞ் சிறக்கவிளக்கும். (உ௩)

விளக்கியவன்னி வாய்வுடன்கூடின்
தளக்கியதாபச் சுரங்காணுந்தோஷமாம்
வளக்கியல்ப்பும் வன்னியுங்கூடிடின்
இளக்கியசீத சுரங்காணிதன்பேர். (உ௪)

## தோஷக்குறி.

பேரானதோஷம் பிறக்குமுறைகேள்
வாரானவாதமும் வன்னியுங்கறுப்பாம்
தாரானவையந் தானுறின்வெண்மையாம்
சேராதபித்தம் சிவந்திடும்வாயுவில். (உ௫)

வாயுவடங்கிடின் வளருந்தோஷம்போம்
வாயுவெழும்பினுன் மன்னுநீரொன்றிடும்
வாயுவுநீரும் வயங்கிடின்வன்னிசாம
வாயுவுமாகாச மண்டலவோசையே. (உ௬)

ஓசையிலேழு மொளியிலோரைந்தும்
நாசியின்மூன்று நாவிலிரண்டுமே
தேசியுந்தேசனுஞ் சேர்ந்துபிரிந்திடும்
மாசிலாநந்தி மகிழ்ந்துரைத்தாரே. (உ௭)

## மரணக்குறிவருடமுதலியகூறல்.

உரைத்திட்டநாசிப் புறக்குறிதனைக்கேள்
விரைத்திட்டபின்கலை விடாதொருமூன்றுநாள்
இரைத்திடினன்றி னெய்துவன்றென்புலம்
பரத்திலிரண்டேல் பகரீராண்டெண். (உ௮)

எண்ணியொருநா ளியங்கிடிற்பின்கலை
தண்ணுமூவாண்டிற் றப்பாதுமாரணம்
ஒண்ணுபயத்தி லோடிடிற்பத்துநாள்
மண்மாதமாறினில் மாளுங்குறியிதே. (உ௯)

குறிமூக்கன்றியே குலவியவாய்வழி
உறுமெனின்மூன்றா ளுயர்பதமடைவான்
தெறிதருமூன்றுந் திரண்டுமிக்குறின்
பருவருமரணம் பகர்ந்தப்பமே. (௩௰)

RangaRakes tamilnavarasam.com

தப்பாதுவாய்நீர்தான் தாக்கித்தன்மேல்வீழின்
ஒப்பாகத்தனுமறைய வொழிந்திடுவன்மதியாறில்
செப்பாகத்தானிருக்கச் சேர்ந்தநிழலிலைந்திடினே
அப்பாகேளோராண்டி னறுங்காணிகொண்டிடுவான். ( )

கொண்டிடுதோஷக் குறிசொன்னேரெக்கந்தி
தண்டுமுகடு தனிப் பல்லுநாக்கொன்றும்
மண்டிக்கறுத்து வயங்குமேயாமாயின்
ஒண்டுமொருநா ளுறுதியாச் சாவானே. (௩௨)

உறுதியாய்ப்பித்த முடம்பிளைக்கச்செய்யின்
பொறையாகப்பாடைக்குப் போவான்மதியாறில்
அறுதியாமைபுகல் லத்திபுரைச்செய்யின்
உறுதிசேரோர்மதியி லொடுங்கிடுமேநற்சிவன். (௩௩)

சிவகளையாச் செழித்திடு நாடியில்
ஆவக்கரம்வைத் திடினதேமேலேற்றும்
காலொத்துமேனேக்கின் சாவானெருநாளும்
பாலொத்துக்கீழ்நோக்கின் பறையாமற்சாவானே. ( )

பறைதக்கின்றமுந்நாடி பாங்குவேறுகியே
நிறைதக்கின்றவாதமும் பித்தமுநீக்கிடின்
அறைதக்கொண்டிருநாளு தோற்றியவுயிர்நீங்கும்
பறைதக்கொளனிலபித்தம பலகிலேசாவில்லை. (௩௫)

பித்தமடங்கிடிற் பேசாதொடுங்கிடும்
எத்தியவைய மெழுப்பின்யமன்கைப்
பற்றிப்பிர்த்திடுவன் பகர்வாதமுற்றிடின்
சத்தியமாகச் சாவில்லையேறி. (௩௬)

அறிக்கவிம்மூன்று மடங்காமனின்றே
சிறந்துநடக்கின் செப்புவாய்சாவில்லை
பறிந்திடுநாடி புற்றிக்கிழேமூடிடின்
கறிநீருயிர்தான் மறலிகைபபுகுமே. (௩௭)

புக்கியேயுந்தி பொருந்துகடைவிரல்
எக்கியுயா லெழும்பின்மகாதோஷம்
அக்காலவுந்தி யாதாரம்வாய்க்கு
[illegible]த்தலமெனவகுத்தனர்தாறுவே. (௩௮)

RangaRakes tamilnavarasam.com

தாதுநடக்குந் தனித்தலங்கேளுநீ
ஓதாநதிகா லுயருந்திமார்புடன
நீதிலைகம்மூலந் நிகழ்சந்துகண்டம்
காதடியிருகரம் கவின்றுண்டப் பார்த்திடே. (௬௯)

பார்க்கிற்றசநாடி பண்பாடந்திடின்
தீர்க்கமாய்வாழ்வான் செப்புபிசகெனின்
வார்க்குழலானே மறலியுலகினைப்
பார்த்தக்கணிலான் பகரிடதுண்மையே. (௭௰)

உன்னையபாங்வாதமும் பித்தமுந்திடின்
இன்னையாம்பித்த சுரம்பிறக்குமே
நன்னரிபவையமும் நற்பித்தங்கூடிடின்
மன்னனில்வாழ்பவர்க்கு வருஞ்சீதசுரமே. (௭௧)

சரமதாம்வாய்வுந் துயர்செயும்பித்தமும்
உரமாச்சரிவர வோடிடிற்றோஷமாம்.
திரமானவையமுஞ் சேர்பித்தமோர்நிறை
பரமாநடக்கின் பகருவாய்தோஷமே. (௭௨)

பகரிடப்பித்தமும் வாதமுநேராய்த்
தகுநடைகொளனின் தான்தோஷமாகுமே
உருமையமோராரை யொன்றுகவாதமும்
செகுபித்தமீரதாச் செறிற்றோஷமாகுமே. (௭௩)

[ஆ]குமேபித்த மதிகமாய்வாதத்தில்
[பா]குமேயாயின் புத்திமயக்கிடும்
[ஐ]வகமாவைய மேலிடினுன்மூன்றில்
போகுமேசீவன் புகலுதென்னுலகினில். (௭௪)

உலகுளமார்ந்த சொளிர்நாடிமூன்றும்
திகிலுறப்பட்டப் பாகினற்சன்னியாம்
இகலுறுமையமில் கிருநாடிகட்கும்
அகலநடக்கினா னாக்கினிற்போகுவன். (௭௫)

போகுமேபித்தமும் வாதமுந்தாழ்ந்திட
சேகனையுஞ் [illegible]
வாகாகவந்த மட்டின[illegible]
ஏகுவான்கூற்றனூர் [illegible] ([illegible])

என்னுவாயையா விரும்பித்தனிம்பமும்
நன்னிடுமாயினுன் மூன்றிற்சாவதே
தின்னைமாம்பித்தமூர் தெளிவாதமும்மரை
வன்னைமாபோடிடின் மாணாமோநாளெந்தில். (௪௭)

ஐயமெழும்பி யடங்கிடின்மற்றவை
வையகம்விட்டு வாழ்வன்மறலியூர்
செய்யவோர்நாளிற் சிறியவையம்
எய்யவொன்றேடிடி னேமனுலகப்போம். (௪௮)

போகுமேவாதம் புளிப்பைமிகத்தரும்
பாகுறுபித்தம் பகர்ந்திடுகசப்பாம்
தேகிடுமையர் தித்திப்புமீறிடும்
ஆகவவற்றி னளவுமீறிடினே. (௪௯)

மீறியவைய மேவுகுதிரைபோல்
பாறிலோர்நாளில் பறக்குமுயிரே
சீறியவாதமும் பித்தமுமையமும்
கூறுசரியாக் கூறிலைந்நாழிகை. (௫௦)

நாழிகையென்று நாடிகீழ்நோக்கிடின்
வீழுவன்றேர்நாள் மேவிவேவாதமும
தாழ்வுறுபித்தமுந் தான்சரியாகி
வாழ்வறுமையம் மயங்கின்வானேறுவன். (௫௧)

ஏறிடுநாடி யியல்பைநீகேளு
மாறிடுசேத்தும முதயந்தனிலும்
மாறிடுபித்தம் வரும்பகல்கன்னிலும்
தேறிடுவாதஞ் சோமாலைப்போதிலும். (௫௨)

பேர்தினிற்றப்பிடிற் பெருந்தியநோயுறும்
மேதினிமாந்தர் மேவுமுந்நாடியால்
வாந்தயடையும் வகையிதுவாமென
ஓதினாயுன் வேதவேதியரே. (௫௩)

திருமூலர் நாடியந்தாதி

முற்றுப்பெற்றது.

RangaRakes tamilnavarasam.com